# மணப்பாறை நகராட்சி

**2020- ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் (05.02.2020) 05– ஆம் தேதி புதன்கிழமை மாலை 04.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 05.02.2020 | **பொருள் – 1**<br>2019–20ம் ஆண்டிற்கான 14வது மத்திய நிதிக்குழு மான்யத் தொகை ரூ.317.71 இலட்சம் (இரண்டு தவணைகள்) மணப்பாறை நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அத்தொகையில் 50 சதவீத தொகையினை சேதமடைந்த சாலைகளை சீர் செய்வதற்கு பயன்படுத்திக் கொள்ளலாமென நகராட்சி நிர்வாக ஆணையரகத்தால் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி மணப்பாறை நகராட்சியில் குடிநீர் பணிகளாலும் இயற்கை இடர்பாடுகளினாலும் சேதமடைந்த18 எண்ணிக்கையிலான சாலைப்பணிகளை சீர்செய்வதற்கு ரூ.158.85 இலட்சத்திற்கு 28.01.2020–ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.<br>மேற்கண்ட பணிக்கு 28.01.2020 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு அதற்கான தொழில்நுட்ப தகுதி உறை (Technical Bid)-ஐ கூர்ந்தாய்வு செய்ததில் இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஆவணங்கள் சரியாக உள்ள நிலையில் 03.02.2020 அன்று (Price Bid) விலை உறை திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது. | **தீர்மான எண்.707 அனுமதிக்கப்பட்டது.** |

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாயில் | மதிப்பீட்டின்படி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு. வி. ஆனந்தன், மணப்பாறை. | 13863328.04 | 14555406.65 | **4.99%** கூடுதல் |
| 2 | M/s. ஓம் சக்தி கன்ஸ்ட்ரக்சன், மணப்பாறை | | 15769665.00 | **13.75%** கூடுதல் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் விலைகுறைப்பு செய்து தருமாறு குறைவான ஒப்பந்த விகிதம் அளித்திருந்த ஒப்பந்ததாரர் திரு.வி.ஆனந்தன், என்பவரிடம் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டதற்கிணங்க விலைக்குறைப்பு செய்தபின் ஒப்பந்தப்புள்ளி விவரம் கீழ்க்கண்டவாறாகும்.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **மதிப்பீட்டு தொகை ரூ.** | **விலை குறைப்புக்கு முன் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.** | **விலை குறைப்புக்கு பின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.** |
|---|---|---|---|---|
| **1** | திரு. வி. ஆனந்தன், மணப்பாறை. | 13863328.04 | 14555406.65 (**4.99**% மதிப்பீட்டைவிட கூடுதல்) | 14514864.00(**4.70**% மதிப்பீட்டைவிட கூடுதல்) |

மேற்காணும் ஒப்புநோக்கு பட்டியலின்படி விலை குறைப்பு செய்தபின் உள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**1.**மேற்கண்ட பணிக்கு ஒப்பந்ததாரர் திரு. வி. ஆனந்தன், மணப்பாறை என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு தொகையிலிருந்து **(4.70% கூடுதலாக)** கொடுத்துள்ளார் இக்கூடுதல் சதவீதமானது அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு தொகைக்கு 5%-க்குள் உள்ளதாலும், மேலும் இப்பணி திட்டப்பணி என்பதாலும் மன்றம் ஏற்கலாம்.

**2.**அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டின் தொகையை விட கூடுதலாகும் தொகையை நகராட்சி பொதுநிதியில் ஈடு செய்து கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**ந.க. எண். 3148/2019/ இ1**

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**